

சென்னையில் பெய்து வரும் கன மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேற்று (30.11.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்துறை அமைச்சர் எ.வ.வேலு, கிண்டி கத்திபாரா, ஜவஹர்லால் நேரு சாலை, (100 அடி முழுவதும்) உதயம் தியேட்டர் சந்திப்பு போன்ற பகுதிகளில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், கோட்டப் பொறியாளர், வ.ரவி, உதவிப்பொறியாளர் ராம்நரேஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னையில் பெய்த பலத்த மழை காரணமாக சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்பட்ட நெருப்புமேடு, செட்டி தெரு, கோதாமேடு, பஜார் தெரு, மேற்கு ஜோன்ஸ் சாலை, ஈக்காட்டுத்தாங்கல், கங்கையம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் நேற்று (30.11.2023) களப்பணிகளை பார்வையிட்டு மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் தேங்கியிருக்கும் மழைநீரினை அகற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (30.11.2023), கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்யாணபுரம் பள்ளம் மற்றும் உட்வார்ப் ஆகிய பகுதிகளில் மழைநீர் வெளியேற்றப்படுவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.





